# திருப்புதல் தேர்வு 3 – 2022-23(SET B)

**வகுப்பு: X** **தமிழ்**

**காலம் : 1 ½ மணி** **மதிப்பெண்கள் : 40**

## பகுதி - அ

**I)** **அ)** பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற, நீ செய்கின்ற முயற்சிகள் பற்றி உன் நண்பனுக்கு / தோழிக்குக் **கடிதம்** எழுதுக. **(6)**

( உனது முகவரி: பூவண்ணன் / பூமகள் , எண் : 54, திரு.வி.க நகர், மதுரை எனக் கொள்க )

**அல்லது**

**ஆ) கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக:**

முன்னுரை – இயற்கை – மழைத்துளியும் மண்ணின் வளமும் – மரம் நம் வரம் - மழை நம் உயிர் – பசுமையைக் காப்போம் - முடிவுரை

## பகுதி - ஆ

**II) அ.சான்று தருக (எவையேனும் இரண்டு மட்டும் )** (2)

1. படர்க்கைப்பெயர்

அ) அவன் ஆ) நீவிர்

இ) நான் ஈ) நாம்

2. திணைவழு

அ) எழிலன் உண்டான் ஆ) பெரியவர் பேசினார்

இ) பரதன் வென்றான் ஈ) இலக்கியா எழுதியது

3. கால வழாநிலை

அ) நேற்று வருவான் ஆ) நாளை வந்தான்

இ) நேற்று வந்தான் ஈ) நாளை வந்தனர்

**ஆ. நிரப்புக. (எவையேனும் இரண்டு மட்டும்)** (2)

1. இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் ................ எனப்படும்.

அ) வழுநிலை ஆ) வழாநிலை

இ) வழுவமைதி ஈ) சொற்றொடர்

2. தன்மையினை படர்க்கை இடத்தில் கூறுவது ........... எனப்படும்.

அ) கால வழுவமைதி ஆ) மரபு வழுவமைதி

இ) இட வழுவமைதி ஈ) பால் வழுவமைதி

3. உயர்திணையில் பலரைக் குறிப்பது ........... எனப்படும்.

அ) ஒன்றன் பால் ஆ) பலர் பால்

இ) ஆண்பால் ஈ) பலவின்பால்

**இ) கூறியவாறு செய்க. (எவையேனும் இரண்டு மட்டும்) (2)**

1. அ.்றிணை (பிரித்து எழுதுக)

அ) அ + திணை ஆ) அல் + திணை

இ) அற் + திணை ஈ) அ.். + திணை

2. படித்தார்கள் (முன்னிலை வினையாக்குக)

அ) படித்தனர் ஆ) படிப்பார்கள்

இ) படித்தோம் ஈ) படித்தாய்

3. யான் (படர்க்கை பெயராக்குக)

அ) நீங்கள் ஆ) நான்

இ) நாம் ஈ) அவன்

**ஈ) இலக்கணக் குறிப்பு தருக(எவையேனும் இரண்டு மட்டும்) (2)**

1. ‘வாடா இராசா, வாடா கண்ணா’ – தாய் மகளை அழைப்பது.

அ) இட வழுவமைதி ஆ) கால வழுவமைதி

இ) திணை வழுவமைதி ஈ) பால் வழுவமைதி

2. குயில் கத்தும்

அ) திணை வழு ஆ) இட வழு

இ) மரபு வழு ஈ) பால் வழு

3. சிறுவன் விளையாடினான்

அ) தன்மை வினை ஆ) படர்க்கை வினை

இ) முன்னிலை வினை ஈ) தன்மை பெயர்

## பகுதி - இ

**III) கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க.அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)**

“அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று”

**வினாக்கள்:**

1. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

அ) காசிக்காண்டம் ஆ) திருவிளையாடற்புராணம்

இ) மலைபடுகடாம் ஈ) நீதி வெண்பா

2. இப்பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?

அ) பரஞ்சோதி முனிவர் ஆ) அதிவீரராமபாண்டியர்

இ) கா.ப.செய்குதம்பிப் பாவலர் ஈ) பெருஞ்சித்திரனார்

3. மருள் - பொருள் தருக

அ) பகல் ஆ) மயக்கம்

இ) இருள் ஈ) மகிழ்ச்சி

4. ஆவிக்கு அருந்துணையாய் இருப்பது எது?

அ) கல்வி ஆ) செல்வம்

இ) வீரம் ஈ) புகழ்

**IV) நிரப்புக ( திருக்குறள்) (2x 1= 2)**

1. கருவியும் காலமும் ............. செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

அ) உறவினரும் ஆ) கல்வியும்

இ) கேள்வியும் ஈ) செய்கையும்

2. செய்க பொருளைச் .................. செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்

அ) செறுநர் ஆ) செல்வர்

இ) சிறந்தோர் ஈ) சேர்ந்த

**V) விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) (6)**

1) குலசேகர ஆழ்வார் இறைவனிடம் வேண்டுவது யாது?

2) புவியின் தோற்றம் குறித்துப் பரிபாடல் கூறும் செய்திகள் யாவை?

3) மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தது எங்ஙனம்?

**VI) விடையளிக்க (ஏதேனும் ஒன்று மட்டும்) (4)**

1) செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் பற்றி எழுதுக.

2) பெப்பர், இலா மென்பொருள் பற்றி எழுதுக.

**VII) பின்வரும் துணைப்பாட வினாவிற்கு விடையளி. (7)**

1) ‘விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை’

**VIII) பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற வரைக (3)**

